பருத்தித்துறையில் கப்பலிலிருந்து உணவுப் பொருட்களை இறக்க

## ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்த வேண்டுகோள்

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பலில் இருந்து உணவுப்பொருட்களை இறக்கி யாழ் குடாநாட்டிலுள்ள உணவுக் களஞ்சியங்களுக்கு அனுப்பிவைக்க ஊரடங்கு உத்தரவைத் தளர்த்துமாறு யாழ் அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளார். பலாலிப்பகுதியில் இடம்பெற்று வரும் சண்டை காரணமாக பல நோ. கூ. சங்கங்கள் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள நேரத்தில் தமது வாகனங்களைப் பருத்தித்துறைக்கு அனுப்புவதில் தயக்கம் காட்டுகின்றன. இதனால் கப்பலும் அதிக நாட்கள் தரிக்கவேண்டியுள்ளது. தற்போது பெய்துவரும் மழையினால் பருத்தித்துறைக் கடற்பகுதியில் நீர் மட்டம் உயருமேயானால் கப்பலில் இருந்து பொருட்களை இறக்க முடியாத நிலை ஏற்பட்டுக் கப்பல் திரும்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்படும் என்றும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது, இதேவேளை பொதுமக்களுக்கான இலவச உணவுப் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு	விலை ரூபா:- 3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 249 சனி 20-10-1996 (ஐப்பசி 03) ற.அவ்வல் 30

மானிப்பாயில் தற்காலிகமாக இயங்கிவரும்

# யாழ்போதனா ஆஸ்பத்திரியில் நோயாளருக்கு இடநெருக்கடி

## மீண்டும் நகருக்கு இடம்மாறாவிடில் பல பிரச்சினைகள் ஏற்படும்

**யாழ்ப்பாணம் பகுதியில் தற்போது காயமடைந்தவர்களும், நோயாளிகளும் அதிகரித்து வருவதால் மானிப்பாயில் உள்ள யாழ் போதனா வைத்தியசாலையில் இடநெருக்கடி மற்றும் பிரச்சினைகள் ஏற்படும் நிலைமை தோன்றியுள்ளது.**

யாழ் மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக காயப்பட்ட பொதுமக்களின் தொகை அதிகரித்து வருகிறதால் மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்திய சாலையில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதேபோல வேறுவிதமான நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின்தொகையும் இங்கு அதிகரித்து வருகிறது.

இதனால் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை உணர்ந்து சாதாரண நோயா —04ஆம் பக்கம் பார்க்க

## பலாலி விமான நிலையத்தில் விமானங்கள் இரவு தரிப்பதில்லை

பலாலியில் இருந்து வரும் விமானங்கள் இரவில் விமான நிலையத்தில் தரித்து நிற்பதில்லை.

புலிகளினால் ஒடுபர்தையை நோக்கி ஏவப்பட்ட ஷெல் தாக்குதலின் விளைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலையில் குண்டுகளை நிரப்பியபடி பலாலிக்கு வரும் விமானம் பகல் முழுவதும் வலிகாமம் பகுதியில் குண்டுகளை வீசி மாலையில் தென் பகுதிக்குச் சென்று விடுகின்றன.

இதே வேளை வை 12 ரக விமானம் பலாலியில் இறங்காது உடனேயே சென்று விடுவதும் குறிப்பிடத்தக்கது (32-ரு)

## குரும்பசிட்டி, கட்டுவன் பகுதியில் புலிகள் - இராணுவம் கடும் சமர்

நேற்று மூன்றாவது நாளாக அகோர வானத்தாக்குதல்களின் மத்தியிலும் இராணுவத்தினருடன் வடுதலைப்புலிகள் வயாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளில் மிகக் கடுமையாகச்சமர் புரிந்து வருகின்றனர்.

குரும்பசிட்டி பொன் பரமானந்தமகாவித்தியாலயத்துக்கு முன்னேற முயன்ற இராணுவத்தினருடன் உக்கிர மோதவில் ஈடுபட்டபோது நெல்சன் (பூநகரி) ஜொனி, சோபன் (கோப்பாய்) தமிழ்ச்செல்வன் (மன்னார்), கந்தையா (கரவெட்டி) என்னும் ஐந்து விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர்.

கட்டுவன் சந்தியில் ஏற்பட்ட நேரடிமோதலில் குட்டி (பருத்தித்துறை), அனுஷன் (தெல்லிப்பழை), சுகந்தன் (முல்லைத்தீவு), சின்னமணி என்னும் நான்கு விடுதலைப் புலிகள் வீரமரண மடைந்தனர்.

இத்தாக்குதலின் போது இராணுவதரப்பில் 70 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இறந்ததாகவும் முந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது. (32 ரு)

## மட்டு நகரில் தொடரும் புலிகளின் திடீர்த் தாக்குதல்கள்

நேற்று முன்தினம் மட்டக்களப்பு பழைய பொலிஸ் நிலையம் முன்பாக ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கைக்குண்டுத் தாக்குதலை நடாத்தியதில் இரு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

இதே சமயம் காத்தான் —04ஆம் பக்கம் பார்க்க

## கோட்டையில் தகனம்

பலாலியில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த முன்னாள் அம்பாறை மாவட்டப் பொறுப்பாளர் அன்ரனி (க. ஶ்ரீகரன் கல்முனை) பூதவுடல் ஈச்சமோட்டையிலிருந்து இன்று மாலை 3 மணிக்கு ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கோட்டையில் தகனம் செய்யப்படும். (து)

## மன்னாரில் ஆசிரியர் வரவு குறைவு

மன்னார் கல்வி அலுவலகம் தற்காலிகமாகத் தாராபுரத்தில் இயங்கிவருகிறது. மீண்டும் பழைய இடத்தில் செயற்படுவதற்கு நடவடிக்கை —04ஆம் பக்க்ம் பார்க்க

தெல்லிப்பழையில் நேற்று

## பல தடவைகள் குண்டுவீச்சு குழந்தை உட்பட 6 பேர் பலி

தெல்லிப்பழைத் தபாற் கந்தோருக்கு அருகில் நேற்றுப் பகல் நடாத்தப்பட்ட விமானத்தாக்குதலால்ஒருகுழந்தை உட்பட ஆறு பேர் ஸ்தலத்தில் கொலலப்பட்டனர். இருவர் படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் அருணாசலம் செல்லம்மா (65), சின்னத்துரை தெய்வானம் பிள்ளை (68), இராசமணி (35) ஆகிய மூன்று பெண்களின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன.

இவர்கள் தையிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து கொண்டிருந்த போது இச்சம்பவம் நிகழ்ந்தது

மீண்டும் பிற்பகல் நான்கு மணியளவில் தெல்லிப்பழைச் சந்தியில் நடாத்தப்பட்ட விமானத்தாக்குதலால் யூனி —04ஆம் பக்கம் பார்க்க

நேற்றைய வான் தாக்குதல்

## சுன்னாகத்தில் ஒருவர் பலி மல்லாகத்தில் வீடுகள் சேதம்

சுன்னாகத்தில் நேற்று மாலை 3 மணியளவில் அவ்ரோ விமானம் குண்டுகளை வீசியதால் சுன்னாகம் சந்தை பலத்த சேதமடைந்தது. சந்தை ஒழுங்கையில் ஒருவர் ஸ்தலத்திலே பலியானார், மாடு ஒன்றும் இறந்தது.

எஸ். நவரட்ணம் (48), வ. சுதாகரன் (19), வ. சிவலிங் — 04ஆம் பக்கம் பார்க்க

## கிணற்றில் குண்டு

மாவிட்டபுரம் பகுதியில் நேற்றுக் காலை அவ்ரோ வமானம் போட்ட குண்டு இங்குள்ள கிணறு ஒன்றில் விழுந்து வெடிக்காத நிலையில் உள்ளது. (48ரு)

பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

## பலாலியில் நடந்த மோதலில் 14 ராணுவம் பலி, 145 பேர் காயம்

கடந்த மூன்று நாட்களாகப் பலாலிப் பகுதியில் நடைபெற்ற மோதல்களில் இராணுவத்தினரில் 14பேர் பலியானதாகவும் 145 பேர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் மோதல்களில் பலியான இராணுவத்தினரின் —04ஆம் பக்கம் பார்க்க

## வதந்தியால் மக்கள் இடம் பெயர்ந்தனர்

இராணுவம் வெளியேறியதாகப் பரவிய வதந்திகளையடுத்து இன்று தெல்லிப்பழை, அச்சுவேலிப் பகுதிகளில் கொட்டும் மழையில் நனைந்தபடி மக்கள் கால்நடையாக இடம் பெயர்ந்தனர்.

வளலாய்ப் பகுதியால் இராணுவம் வருவதாக பரவிய வதந்தியையடுத்து வளலாய், தம்பாலை, பத்தமேனி, அச்சு —04ஆம் பக்கம் பார்க்க

கந்த சஷ்டி சிந்தனை - 2

## பெரும் பெயர் முருகன்

'முருகு' என்ற சொல் அழகு, இளமை, தெய்வத்தன்மை, ஞான மணம், மகிழ்ச்சி, இனிமை என்ற பொருள்களைத் தரும். இவற்றை உடையவன் முருகன்.

பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியம் நிலத்தை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்காகப் பிரித்தது.

குறிஞ்சி மலையும் மலைசார்ந்த இடமுமாகும். அந்நிலத்துக்குக் கடவுள் முருகன்.

''சேயோன் மேய மைவரை உலகமும்''

'சேய்'. 'சேயோன்' என்பன முருகனுக்குப் பெயர்கள். சிவந்த நிறமுடையவன் என்பது கருத்து.

'ஸ்கந்தன்' என்ற வட சொல்லுக்கு, ஆறு திருமேனிகள் ஒன்றானவன் என்றும், வலிமை கொண்ட தோள்களை உடையவன் என்றும் பொருள் கூறுவர்.

சந்தன் என்பதற்கு, பகைவர்களுடைய பராக்கிரமங்களை வற்றச் செய்பவன் என்றும் ஒரு பொருளுண்டு.

ஸ்கந்தயதி சத்ருன் சோஷயதீதி ஸ்கந்த:
என்பது அமரகோசம்

கந்து என்பது கட்டுந்தறியைக் குறிக்கும். ஆன்மாக்களைக் கட்டுந்தறி கந்தன் அதாவது, ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடானவன்,

'குமார' என்பது வடமொழி மந்திரங்களுள் சிறந்தது. அதன் தமிழ் வடிவம் குமாரன். எப்பொழுதும் இளமைப் பருவத்தை உடையவன் - என்றும், மன்மதனை ஒத்த அழகன் என்றும் இது பொருள் படும்.

'என்றும் இளையாய், அழகியாய்! ..'
என்றார் நக்கீரர்.

'குகன்' என்பதும் முருகன் திருப்பெயர்களுள் ஒன்று. மலைக்குகைகளில் கோயில் கொண்டிருப்பவன் என்றும், அன்பர்களின் இதய கமலங்களில் உறைபவன் என்றும் இப்பெயருக்குப் பொருள் கொள்வர்.

சிவனுடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய ஆறு பொறிகளையும் கங்கை சுமந்த படியால் - கந்தன் கங்கை மைந்தன் ஆனமையால் - 'காங்கேயன்' என்று அழைக்கப்படுகிறான்.

கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன், ஆதலின் '' கார்த்திகேயன்'' என்றும் அவனுக்குப் பெயர்.

நாணற்புல் நிறைந்த பொய்கையில் தோன்றியவனாதலின், முருகனுக்கு, 'சரவணபவன்' என்னும் காரணப் பெயரும் வழங்கலாயிற்று.
(சரம் - நாணல்; வனம் - காடு; பவன் தோன்றியவன்)

சரவணபவ என்னும் ஆறெழுத்தும் முருகனுக்குரிய தாரக மந்திரமாகும்.

இவை தவிர, சேந்தன், கடம்பன், வேலன், சண்முகன், விசாகன், சுப்பிரமணியன் எனப் பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மான் அவன்.

## கந்தசஷ்டியையொட்டி விரதம், விசேட பூஜை

கந்தசஷ்டி விரதமும் விசேட பூஜைகளும் நேற்று பல பகுதிகளிலும் பக்திப் பரவசத்துடன் ஆரம்பமாகின. நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோவிலில் நேற்றுக்காலை பக்தர் கூட்டம் நிறைந்திருந்தது. பெண் பக்தர்களே மிகக் கூடுதலாகக் காணப்பட்டனர். இடுக்கண்ண எதிர்ப்புகளை எல்லாம் வல்ல எம்பெருமான் முருகனின் வேல் தடுக்கும். எதிர்காலத்தில் மலர்ச்சிமிக்க வாழ்வு தரும் என்ற மேலோங்கிய நம்பிக்கையுடன் பக்தர்கள் தத்தம் இல்லங்களிலும் விளக்கேற்றி மங்களம் பேணி நின்றதனையும் அவதானிக்க முடிந்தது. (ஸ்ரீ)

பரந்தன், வாழைச்சேனை உட்பட

## 9 அரச கூட்டுத்தாபனங்கள் மக்கள் மயப்படுத்தப்படும்

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் ஆகியவை மக்கள் மயப்படுத்தப்படவுள்ளன.

இவற்றுடன் மேலும் ஒன்பது அரச கூட்டுத்தாபனங்களும் விஞ்ஞான, கைத்தொழில் நுட்ப அலுவல்கள் அமைச்சினால் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளன.

அரசகனிப்பொருள் சுரங்க அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், இலங்கை ரயர் கூட்டுத்தாபனம், இலங்கை இரும்புப் பொருள் கூட்டுத்தாபனம், இலங்கை ஒக்சிஜன் நிறுவனம், இலங்கை தோல் உற்பத்திப் பொருள் கூட்டுத்தாபனம், இலங்கை தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம், இலங்கைக் கணிய மணல் கூட்டுத்தாபனம், இலங்கை ஒட்டுப் பலகைக் கூட்டுத்தாபனம் ஆகியவையே மக்கள் மயப்படுத்தப்படவுள்ள எஞ்சிய கூட்டுத்தாபனங்களாகும்.

கூட்டுத்தாபனங்களின் நிர்வாகங்களை பரவலாக்கவும், மக்களின் பங்களிப்பை அதிகரிக்கவுமே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அரசு அறிவித்துள்ளது.

ஆனால் சிதைவுற்றுக் கொண்டிருக்கும் தனது பொருளாதாரத்தைக் கையாள முடியாத நிலையில் அரசு இந்த நடவடிக்கையை எடுப்பதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. (கி)

## பொன் விழா

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பொன்விழாக் கொண்டாட்டம் இன்று 20-ந் திகதி சனிக்கிழமை யாழ் சேர். பொன். இராமநாதன் வீதியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (33கி)

6 சிங்கள மாவட்டங்களுக்கு 80 கோடிரூபா ஒதுக்கீடு;

# வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு வரட்சிநிவாரணம் இம்முறை இல்லை

இவ்வருடத்திற்கான வரட்சி நிவாரணம் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு வழங்கப்படமாட்டாது என அறியப்படுகின்றது

இலங்கையில் வரட்சியால் அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளாக வடக்கு, கிழக்குப் பகுதிகள் உள்ளன.

ஆயினும் இம் முறை வரட்சி நிவாரணம் வழங்கத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாவட்டங்களுக்குள் வடக்கு கிழக்குப் பகுதிகளான தமிழ்ப் பகுதிகள் எதுவும் தெரிவுசெய்யப்படவில்லை.

நிவாரணம் வழங்கத்தகுதியான இடங்களாகக் குருநாகல், புத்தளம், மொனராகலை, அனுராதபுரம், அம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய சிங்கள மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆறு மாவட்டங்களிலுமுள்ளோருக்கு நிவாரணம் வழங்கவென 80 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (கி)

## உதவிப்பணக் கொடுப்பனவு

கிளிநொச்சி மாவட்டத்தில் மாதாந்த உதவிப் பணம் பெறும் வறியமக்களுக்கு கடந்த யூலை மாதத்துக்குரிய உதவிப் பணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு அடுத்த மாதங்களுக்கான கொடுப்பனவுகளுக்குரிய பணத்தை விரைவில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை காச நோய், புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கான உதவிப் பணம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33.கி)

## தபால் அனுப்பக் கோரிக்கை

கிளிநொச்சிப் பகுதிக்கான அரச அத்தியாவசிய தபால்கள் கடந்த ஜூன் மாதம் தொடக்கம் கொழும்பில் இருந்து இப்பகுதிக்கு வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தபாற் பொதிகளை கிளிநொச்சிக்கு விரைவாக அனுப்பி வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் கொழும்புத் தபாற் திணைக்கள அதிகாரிகளைக் கடித மூலம் கேட்டுள்ளார்.

பதிவுத் தபால், வெளிநாட்டுத் தபால்கள் ஆகியவை கடந்த மூன்று மாத காலமாக இப்பகுதிக்குக் கிடைக்கவில்லையென்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (33 கி)

## சிவசம்பு ஓய்வுபெற்றார்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் சிவசம்பு தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. கந்தையா சிவசம்பு சென்ற 38 வருட காலமாக யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சிப் பகுதிகளில் பல முக்கிய பதவிகளில் சேவை புரிந்துள்ளார்.

கடந்த ஒரு வருடமாகச் சண்டிலிப்பாயில் உதவி அரச அதிபராகக் கடமை புரிந்து பொது மக்களுக்கும், விசேஷமாக வறியவர்களுக்கு மாதாந்த உதவிப் பணம், உணவுமுத்திரை மற்றும் உதவிப்பணங்களைத் துரிதமாக வழங்கிப் பலரின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

இவர் வன்செயலால் முன்பு பாதிக்கப்பட்ட சண்டிலிப்பாய் காரியாலயக் கட்டிடத்தை பெருமுயற்சியெடுத்து விரைவில் புதிதாகக் கட்டி முடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

## உங்களுடையதா?

நில அளவைத் திணைக்களத்தில் தொழிலாளியாகக் கடமையாற்றும் கபம்புலம் காரைநகர் ரி. பொன்னம்பலம் என்பவரின் உத்தியோக அடையாள அட்டையும் கண்டெடுக்கப்பட்டு 'முரசொலி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## புலிகளிடமிருந்து தன்னையே புத்தரினால் காக்க முடியவில்லை

விடுதலைப்புலிகளிடமிருந்து தன்னை அண்டிவந்த சிப்பாய்களை மட்டுமல்ல தன்னையே காக்க முடியாத நிலை கௌதம புத்தருக்கு ஏற்பட்டுவிட்டது. யாழ். கோட்டைக்குள் உள்ள கௌதம புத்தரின் சிலையின் நிலையைத்தான் இங்கு குறிப்பிடுகிறோம். கோட்டைக்குள் இருந்த சிங்களச் சிப்பாய்கள் தங்களின் பாதுகாப்பிற்காக அங்கு பல புத்த சிலைகளை அமைத்துள்ளனர். கடந்த கால முற்றுகையின் போது விடுதலைப் புலிகளின் தாக்குதல் உக்கிரமடையவே சிப்பாய்கள் கோட்டைக்குள் இருந்த பெரிய புத்தரின் சிலையை அண்டியதாக சென்ரியொன்றை அமைத்திருந்தனர். இந்த சென்ரியின் ஒருபக்க அரணாக புத்தரின் அப் பெரிய சிலை அமைந்திருந்தது. முற்றுகையின் கடைசிக் காலத்தில் புலிகள் ஏவிய 'பசிலின் 2000' ஷெல்லினால் புத்தரின் 'அரவணைப்பில்' இருந்த சில சிப்பாய்கள் கொல்லப்பட்டு, சென்ரி சின்னாபின்னப் படுத்தப்பட்டதுடன் புத்தரின் தலையையும் பசிலின் சீவிச் சென்றுவிட்டது. இதேபோன்று தலையற்ற பல புத்தர் சிலைகளைத் தற்போது கோட்டைக்குள் காண முடிகிறது. (கி)

முரசொலிக்கு வந்த கடிதம்

## ஸ்ரீலங்கா இராணுவம் என்ன, இந்திய இராணுவத்துக்கே கிலிதான்

ஆசிரியர்,
முரசொலி

'பிரபாகரனின் படம் என நினைத்து கிலி கொண்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர்' என்ற செய்தியை 15-ம்திகதிய முரசொலி பத்திரிகையில் வாசித்தேன்.

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் என்ன, அமைதிப்படை அதிகாரியே கிலி கொண்ட சம்பவம் ஒன்று எனது சகோதரி வீட்டில் முன்பு நடந்துள்ளது.

இந்திய அமைதிப்படை தேடுதல் சுற்றிவளைப்பு என்று ஒருமுறை எங்கள் வீடுகளுக்கு வந்தபோது எனது பொறுப்பில் இருந்த எனது சகோதரி வீட்டுக்கு வந்தார்கள். முதலில் உள்ளே சென்ற அதிகாரி 'பிரபாகரன் - பிரபாகரன்' என்று உரக்க ஏதோ பிரபாகரனை பிடித்து விட்டது போன்று கத்தினார். பின்னால் வந்த ஜவான்களும் உசார் நிலையில் வீட்டுக்குள் ஓடி வந்தார்கள், அங்கு மாட்டப்பட்டிருக்கும் ஒரு படத்தைக்காட்டி 'பிரபாகரன்' என்று அதிகாரி அவர்களுடைய மொழியில் கத்தினார். இருஜவான்கள் எனதுபக்கத்தில் வந்து நின்று விட்டார்கள் எல்லோரும் என்னைப்பிடித்து தின்று விடுவதுபோல் நின்று கொண்டிருந்தார்கள். இவ்வளவுக்கும் அங்கே மாட்டப்பட்டிருந்த படம் திரு. சிவாஜிகணேசனுடையது. 'பைலட் பிரேம்நாத்' என்ற படத்தின் இராணுவ உடுப்புப் போட்ட மிடுக்கான கட்டம்.

அதே நேரம் நான் சார்-சார் அது சிவாஜிகணேசனின் படம். இவர் இந்தியாவின் மிகப் பெரிய நடிகர் இந்திரா காங்கிரஸ் மெம்பர் என்று எனக்குக் கொஞ்சம் தெரிந்த ஆங்கிலத்தில் கூறினேன் - அவர்கள் நம்புவதாக இல்லை. படத்தையும் என்னையும் மாறிமாறிப்பார்ப்பதும் வேறு படங்களும் இருக்குமோ என்று தேடுவதிலும் கண்ணாக இருந்தார்கள்.

எனது கதையும் சகோதரியின் வீடும் சரியாகப் போகின்றது என்று நான் மனதுக்குள் நினைத்துக்கொண்டேன். என்னவோ எனது நல்லகாலம் ஒரு சீக்கிய ஜவான் 'ஏ பாபு' என்று யாரையோ கூப்பிட்டார். உடனே வெளியில் சென்ரியில் நின்ற தமிழ்நாட்டு ஜவான் ஒருவர் ஓடிவந்தார். இவரிடம் அந்தப்படத்தில் உள்ளது யார் என்று அந்த சீக்கிய ஜவானும் அதிகாரியும் ஒரே நேரத்தில் கேட்க, அந்த தமிழ் ஜவான் சிவாஜிகணேசனின் படத்தைப் பார்த்துவிட்டு, சிவாஜிகணேசனைப்பற்றி மற்றவர்களுக்கு ஒரு பிரசங்கமே வைத்துவிட்டார். அப்போது பார்க்க வேண்டுமே! அதிகாரி உட்பட அனைவரின் முகத்திலும் அசடு வழிய என்னைப் பார்த்துச் சிரித்தபடி வெளியேறினார்கள். இன்றும் அதே படம் அதே வீட்டில் கம்பீரமாக இருக்கின்றது.

-த. பவளம்
நீர்வேலி வடக்கு.

முரசொலி

## எமது சிந்தனை

1990 – 10 – 20 சனி

''சட்டங்கள் ஆடைகள் போல; எந்த மக்களுக்கு அவை பயன்பட வேண்டுமோ, அவர்களுக்கு அவை பொருத்தமாகவும் இருக்க வேண்டும்.''

— கிளாறென்ஸ் டாறோ

# தேவை: ஒரு புதிய அரசமைப்பு

''எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றுகூடி ஒரு புதிய அரசமைப்பை உருவாக்குவதே இந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஒரேவழி!'

இவ்வாறு சொல்லியிருப்பவர் மூத்த அரசியல்வாதியாகிய எஸ். டி. பண்டாரநாயக்கா. யார் இந்த எஸ். டி. பி?

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவர். தற்போது ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் தலைவர். இலங்கை அரசியலில் பழம் தின்று கொட்டையும் போட்டவர்.

பண்டா—செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே. ஆர். ஜெயவர்த்தனா கண்டிக்குப் பாதயாத்திரை போன போது, அந்தப் பாத(க)யாத்திரையை முறியடித்து 'இம்புல் கொட வீரயா' என்று எஸ். டபிள்யூ. ஆர். டி. ஆல் பாராட்டப்பட்டவர்!

ஆனால், எஸ். டி. பி இன் பெருமை இவற்றில் இல்லை. ஸ்ரீ. ல. சு. கட்சி மாமி—மருமகன் கட்சியாகவும், தாய்—பிள்ளைகள் கட்சியாகவும் மாறியபோது, அதில் கரைந்துபோன முகமிழந்த மனிதர்களில் ஒருவராகவில்லை அவர்!

மந்திரிப்பதவியை நாடிப்போகாமல் தமக்குச் சரியென்று பட்டதைத் தயங்காமல் சொல்லி வந்தார். தம்மைக் கவர்ந்திழுக்கப் பார்த்த ஐ. தே. கட்சியின் வலையிலும் அவர் விழவில்லை!

தமது நீண்ட அரசியல் அனுபவத்தால், எஸ். டி. பி. இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு வழி சொல்கிறார்:

''புதியதொரு அரசியலமைப்பை உருவாக்க வேண்டும்!''

இதன் பொருள் என்ன? தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்பே நாட்டில் ஏற்பட்ட கோளாறுகளுக்கெல்லாம் மூலகாரணம் என்பதே!

இது, வழமையாக, கிளிப்பிள்ளைப் பாடமாக, ஜனாதிபதியும் பிறரும் சொல்லி வருவதற்கு எதிர்மாறானது;

''நாட்டின் ஒற்றையாட்சியமைப்பு என்ற சட்டகத்துக்குள்ளேதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்!''

ஒற்றையாட்சி அமைப்பு ஏதோ மாற்றவொண்ணா வேதம் என்ற நோக்கில் பேசி வரும் ஐ. தே. கட்சியினரும் ஸ்ரீ. ல. சு. கட்சியினரும் ஒன்றை நினைத்துப் பார்ப்பதில்லை.

பாரபட்சமான ஒற்றையாட்சி அமைப்பே தாம் படும் துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணம் என்று தமிழர்கள் கருதுகிறார்கள்.

நாடு சுதந்திரம் பெறும் சமயம் அமுலில் இருந்தது சோல்பரி அரசியலமைப்பு. அதன் 29(2)ஆம் பிரிவு சிறுபான்மை இனங்களுக்குச் சில பாதுகாப்புக்களைக் குறிப்பிட்டது.

தமிழர், முஸ்லிம்கள், மலையகத் தமிழர், பறங்கியர்-எல்லோரும்-கூட்டாகச் சேர்ந்தால் சிங்களப் பெரும்பான்மையைச் சமாளிக்கும் அளவுக்கு சமபலம் ஏற்படும் என்று அக்காலத்துத் தமிழ்த் தலைவர்கள் நம்பினார்கள் என்பதைவிட, பெரிய சேனநாயக்காவை மலைபோல நம்பினார்கள் என்பதே பொருத்தம்!

பிறகு நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் — மலையகத் தமிழர் குடியுரிமைப் பறிப்பு, தனிச் சிங்களச் சட்டம், கௌரவிக்கப்படாத இரண்டு ஒப்பந்தங்கள் -எல்லாம்- இந்த நம்பிக்கைக்கு இழைக்கப்பட்ட துரோகத்தின் வரலாறு.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் 1972இல் நிறைவேற்றிய அரசியல் யாப்பும், ஐக்கிய தேசியக் கட்சி 1978இல் வரைந்த அரசியல் யாப்பும், சோல்பரி யாப்பு சிறுபான்மையினருக்கு வழங்கிய அற்பசொற்ப உரிமைகளையும் பறித்தன.

இவற்றுள் இரண்டாவது, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியிடம் அதிகாரத்தைக் குவித்தது.

இவ்வாறு காலத்துக்குக்காலம் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்புக்கள் எல்லாம் ஒற்றையாட்சியை உடும்புப்பிடியாகப் பற்றின. தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் திசையில் ஓரடிகூட வைக்க அவை தயாராய் இருக்கவில்லை.

ஸ்ரீலங்கா சிங்களவர் தாயகம் என்ற 'மகாவம்ச மனப்பான்மை'க்கு — மனநோய்க்கு - சகல சிங்களத் தலைவர்களும் இரையாயினர்.

இனப்பகை என்ற நெருப்பு மூண்டு, கனன்று, ஓங்கி எரிய அரசியல் வாதிகள் அதில் குளிர்காயலானார்கள்!

தந்த கோபுரத்தில் இருந்துகொண்டு தமிழர்களைப் பார்த்து ''ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சி அமைப்புக்குள் ஏதும் கேளுங்கள்!'' என்று சொல்வோர் மத்தியில் எஸ். டி. பி ஓர் உண்மையைச் சொல்லியிருக்கிறார்.

இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம் ஒற்றையாட்சி அமைப்பே; அதை மாற்ற வேண்டும் என்பது அவர் கருத்து.

உண்மையான — நிரந்தரமான — தீர்வை விரும்புவோர் ஊன்றிச் சிந்திக்க வேண்டிய விஷயம் இது.

---

மண்டல் கொமிஷன்: (நேற்றைய தொடர்ச்சி)

# அடிப்படைச் சமூக ஜனநாயகத்துக்கான உளப்பூர்வமான அரச முயற்சியா?
## அல்லது
# அதிகாரச் சதுரங்கத்தின் 'வெட்டு' விளையாட்டுக்களில் ஒன்றா?

எமது அரசியல் விமர்சகர்
**க. மா. இராசையா**

### சாதிமுறை ஸ்திரப்படுத்தப் படுகிறது

இந்த ஒதுக்கீட்டுமுறைமை காரணமாக சாதியொழிப்புக்குத் தொடங்கிய பிராமண எதிர்ப்பியக்கம் இப்பொழுது சாதிமுறைமையை வலிமைப்படுத்தியுள்ள ஒரு துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டிலிருந்து விடுபட்டு, பின் தங்கிய சாதியினருக்கும் வருமான வரையறையொன்றினை வகுப்பது அவசியமாகும்.

### வடக்கில் நிலவுடைமையே அடிப்படை

தெற்கில் நிலைமை இவ்வாறாக, வடக்கில் இந்தச் சமூகசமவீனம் வேறொரு வடிவத்தைப் பெற்றது வடக்கில் மகாராஷ்டிரத்தைத் தவிர்ந்த இடங்களில் பிராமண எதிர்ப்பியக்கம் முக்கியமான அரசியல் சமூக இயக்கமாக மேற்கிளம்பவில்லை. அங்கு பெரும்பாலும் சாதி உயர்வு தாழ்வு விவசாய நிலவுடைமையின் அடிப்படையிலேயே தொழிற்பட்டது. பெரிய நிலச்சுவாந்தர்களான சாதியினர் இந்த நிலச்சுவாந்தர்களை நம்பி வாழு தொழில்களைக் கொண்ட சாதியினர் என்ற அமைப்பிலேயே சாதி ஏற்றத்தாழ்வு தொழிற்பட்டது.

### தென்னகத்துக்கும்வட நாட்டுக்கும் உள்ள வேறுபாடு

நிலச்சாகுபடியுரிமை நிலை நின்று நோக்கும் பொழுது தென்னகத்துக்கும் (தமிழ் நாட்டுக்கும்) வட இந்தியாவுக்கும் முக்கிய வேறுபாடு உண்டு.

சென்னை முறைமை 'றயத்வாரி' முறைமையாகும் இதில் சிறு அளவினதாயினும் நிலம் சொந்தக் காரனுக்கேயுரியது, ஆனால் வடக்கிலோ மேலாண்மையுடைய முறைமை ''ஜஜ்மானி'' (JAJMANI) முறைமையாகும் ''ஜஜ்மானி'' என்பது எஜமான் என்பதன் சிதைந்த வடிவமாகும். இந்த முறைமையில் ''ரயத்வாரி'' முறைமையிலும் பார்க்க ''ஆண்டான்-அடிமை''த் தன்மையே அதிகமானதாகும். செல்வந்த விவசாயியே 'எஜமான்' ஆவன். இந்த அமைப்பில் சமூகமே நிலைப்பாட்டுக்கான அசைவியக்கத்துக்கு (Upward Social Mobility) ஆன சாத்தியக் கூறுகள் மிகக்குறைவாகும்.

(இந்த முறைமையும் தமிழ் நாட்டில் நிலவியது. உதாரணம்: நந்தனார் கதை)

### சுதந்திரத்தின் பின்

இந்திய சுதந்திரத்தின் பின்னர் ஏற்பட்ட விவசாய வளர்ச்சியும், பசுமைப் புரட்சியும் இந்தச் செல்வந்த (எஜமான்) விவசாயியை (Rich Peasant) நோக்கியே தொழிற் படுத்தப்பட்டன. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பொழுது நிலவிய அனைத்திந்தியா பற்றிய கருத்து நிலை ஒருமைப்பாடு சிதைந்ததன் பின்னர் ஹிந்தியின் எழுச்சியுடன் மேனிலைக்கு வந்தவர்கள் இந்தச் செல்வந்த விவசாயிகளே. இவர்களே ஜனதா கட்சி பாரதிய ஜனதாக் கட்சிகளின் முதுகெலும்பாக உள்ளவர்கள்.

இவர்களுடைய சமூகப் பழைமை பேண் வாதத்தையும் ஹிந்தி மேலாண்மை வாதத்தையும் பிரதிபலிப்பனவே இக்கட்சிகள்.

### செல்வந்த விவசாயிகள் மேலாண்மை

இந்தப் பிரதேசங்களில் சமூக அசமத்துவம் அதிகமானதாகவேயுள்ளது. ஆனால் இந்தச் செல்வந்த விவசாய மேலாண்மையினை எதிர்க்க தேசிய அரசியல் கட்சிகளுக்குப் பலம் இல்லையென்றே கூறவேண்டும் அத்தகையதோர் இடர்ப்பாட்டை இந்திரா காங்கிரஸ் முன்னர் எதிர் நோக்கியது. இதனாலேதான் அப்பகுதிகளில் அரசியலில் சில குடும்பங்களின் மேலாண்மை கேள்வி முறையற்று தலை தூக்கி நிற்கின்றது.

### தேவிலால் - ஒரு சின்னம்

'ஜனதா தள'த்தின் கிராமிய நிலை முதுகெலும்பாக விளங்கியது, இந்திரா காங்கிரசை வெறுத்த, இந்தச் செல்வந்த விவசாயக் கூட்டமே. துணைப் பிரதமராக விருந்த தேவிலால் இந்த விவசாய பலத்தின் சின்னமாவார். பசுமைப் புரட்சிப் பிரதேசத்துச் செல்வந்த விவசாயிகளின் முகற்குரலாக விளங்கிய தேவிலாவின் ராஜினாமாவும் அவரின் மகனின் ராஜினாமாவும் ஜனதா தள் கட்சிக்கும் தேசிய முன்னணி அரசுக்கும் இந்த ''வர்க்கத்தினர்'' வழங்கி வந்த ஆதரவை நிச்சயமாகப் பாதிக்கும் நிலை இப்பொழுது ஏற்பட்டுள்ளது. வி. பி சிங் தன்னை அந்த வர்க்கத்தினரின் சின்னமாகவும் முதற்குரலாகவும் ஆக்கிக் கொள்ள முடியாது.

### தேசிய சிறுபான்மைச் சக்திகளின் ஆதரவைப் பெறும்முயற்சி

எனவே அந்தமட்டத்துக்குக் கீழே அதன் பொருளாதார வளத்துக்கு வேண்டிய உடல் உழைப்பினை வழங்கும் கூட்டத்திடம் செல்வதன் மூலமே, வி. பி. சிங் தனது அதிகார நிலையினைப் பேணிக் கொள்ளலாம் அந்தச் செல்வந்த விவசாயப் பிரதேசத்தின் அடிநிலை மக்களினதும், தேசியச் சிறுபான்மைச் சக்திகளினதும் ஆதரவைப் பெறுவதற்கு வி. பி. சிங், வெகு நிதானத்துடன் வீசியுள்ள சவாலே இந்த ஒதுக்கீட்டுப் பிரேரணையாகும்.

### 'தலித்' இயக்கம்

இதில் இன்னொரு மிக முக்கியமான அமிசமென்னவென்றால் இந்தச் செல்வந்த விவசாய வர்க்கத்தின் மேலாண்மையை உடைப்பதற்கான சில அரசியற் சக்திகள் இப்பொழுது படிப்படியாக முளை விட்டுக் கொண்டிருக்கின்றமையேயாகும். கர்நாடகம், மத்திய இந்தியா ஆகிய பகுதிகளில் 'தலித்' இயக்கம் (DALIT MOVEMENT) எனப்படும் தாழ்த்தப் பட்டோர் உடைமையாளர்களான உயர் சமூகத்தினரின் கொடுமைகளுக்கெதிரான ஓர் இயக்கமாக வளர்ந்து வருகின்றது.

### பஹுஜன இயக்கம்

இது மாத்திரமல்லாது அடி நிலை மக்களின் அரசியல் சக்தியாக 'பஹுஜன' இயக்கம் என்ற பெயருள்ள இயக்கமும் படிப்படியாக மேற்கிளம்புவதைச் சென்ற பொதுத் தேர்தல் எமக்குக் காட்டிற்று தேவிலாலை முதற்குரலாகக் கொண்ட செல்வந்த விவசாயி தன்னிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்டால் தவிர்க்கப்படமுடியாதபடி வெகுவிரைவில் வரவிருக்கும் பொதுத் தேர்தலில் தனக்கென ஒரு தானத்தை அமைத்துக்கொள்ளவேண்டுவது வி. பி. சிங்கிற்கு அத்தியாவசிய அரசியல் தேவையாக ஏற்பட்டுள்ளது.

### தூரநோக்குடன் வீசப்பட்ட தூண்டில்

வி. பி. சிங்கின் 27 வீத மத்திய அரசாங்க உத்தியோக ஒதுக்கீடு தூரநோக்குடன் எறியப்பட்ட தூண்டிலாகும். தேவிலாலின் பலத்தைக் குறையச் செய்து தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்கான ஒரு முயற்சியாகவும் இதனை நோக்குதல்வேண்டும்.

இந்த அடிநிலை மக்களுக்கான உத்தியோக ஒதுக்கீட்டை எதிர்ப்பதன் மூலம் எந்த ஒரு தேசிய அரசியற் கட்சியும் தனது வாக்கு (VOTE)ப் பலத்தை இழக்க விரும்பவில்லை. அதனாலேயே அவை வி பி, சிங்கின் இந்த நடவடிக்கையைப் பகிரங்கமாக எதிர்க்க முடியவில்லை.

அத்துடன் இந்தக் கட்சிகளின் உண்மையான பலமூலம் இந்தச் செல்வந்த விவசாயிகள் தாம்.

### மாணவர் வழி எதிர்ப்பு

மாணவர் வழி எதிர்ப்பு, உத்தியோக ஒதுக்கீட்டின் பலவீனங்களை வெளிக்கொண்டு வருவதாகும், திறமைக்கு இடம், வருமான வரம்பு என்பன முக்கிய அம்சங்களாகும்.

பி. ஜே பி இந்திரா காங்கிரஸ் ஆதிய கட்சிகளின் பின் உந்துதல் இல்லாது இந்த மாணவர் இயக்கத்தின் உக்கிரம் பேணப்படமுடியாது என்பது வெளியே சொல்லப்படாத அதே வேளையில் மறைக்கப்படமுடியாத உண்மையாகும்.

### ELITIST

மாணவர் எழுச்சியின் தார்மீக ஆவல்களைப் புரிந்து கொள்ள முனையும் இதே வேளையில் அவர்களின் கோஷத்தின் பின்னே ஒரு எலீற்றிச் (Elitist) வாதம் முன்னாக்கல் படுவதையும் நாம் அவதானிக்கத் தவறக் கூடாது. இந்த ''எலிற்றீசம்'' வடபுலத்து நகர்ப்புறங்களிலே வளர்ந்துள்ளமை ஒருமுக்கிய அம்சமாகும்.

### முதிர்ந்த அரசியல்வாதி வி. பி.சிங்

வி.பி. சிங் எடுத்துள்ள நிலைப்பாடு எந்த ஒரு முதிர்ந்த அரசியல் வாதியாலும் எடுக்கப்படும் நிலைப்பாடேயாகும், அதாவது, பொதுநன்மைக்குள் தனது சொந்த எதிர்காலச் சுபீட்சத்தைப் பின்னிப் பிணைத்து விடுகின்ற திறன் அது

ஆனால், ஏற்கனவே நிலையான தளம் இல்லாத (இருந்ததும் ஆட்டம் கண்டு போன) ஜனதா தளத்துக்கு இந்த ''பஹுஜன'' கோஷம் எந்த அளவுக்கு உதவும் என்பது சந்தேகத்துக்குரிய ஒரு விடயமே.

வி. பி. சிங் ஒரு அற்புதமான அரசியல் வாதி. தன்னுடைய ராஜினாமா ஏற்கப்படாதென்ற சூழ் நிலையிலேயே ராஜினாமா செய்ய முன்வரும் திறமைசாலி

ஆனால், இந்தத் திறமைசாலியால் இந்தியச் சமூகத்தின் அதிகார வரன் முறையை உடைக்கமுடியுமா?

பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்!

(முற்றும்)

# உலக அரங்கில்

## ஈராக்கில் பெற்றோலுக்குக்கட்டுப்பாடு

ஈராக்கிலும் பெற்றோல் பங்கீட்டு முறையிலேயே வழங்கப்படவுள்ளது. ஐ. நாவின் பொருளாதாரத்தடையை அடுத்து ஈராக்கின் எண்ணை உற்பத்தி, ஏற்றுமதியில் பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்யும் வகையிலேயே அரசு பெற்றோலை பங்கீட்டு அடிப்படையில் வழங்கவுள்ளது.

## கிறிஸ்தவ படைவீரர் சிரியப்படையால் கொலை

லெபனானில் சிரியப்படைகளிடம் சரணடைந்த ஜெனரல் அவுனின் கிறிஸ்தவ படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் சிரியப் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இதே சமயம் பிரேஞ் தூதரகத்தில் கடந்த வாரம் சரணடைந்த கிறிஸ்தவ படைப்பிரிவின் தலைவர் ஜெனரல் மிகயில் அவுனின் நிலை குறித்து இன்னமும் மர்மமாகவே இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## சீனாவில் எயிட்ஸ் நோய்

சீனாவில் எயிட்ஸ் நோயினால் இருவர் பலியாகியுள்ளனர். சீனாவிலும் எயிட்ஸ் நோய் தோன்றியுள்ளதை முதற் தடவையாக சீன அரசு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது. போதைப் பொருள் கடத்தலுக்குப் பெயர் பெற்ற நியுனான்ங் மாகாணத்தில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது இது வரை இங்கு. மூவாயிரம் பேர் மீது வைத்திய பரிசோதனை செய்ததில் 446 பேர் எயிட்ஸ் வைரஸ் கொண்டிருப்பது தெரியவந்துள்ளது.

## இடைத் தேர்தலில் கன்சர்வேட்டிவ் தோல்வி

பிரிட்டனில் நடைபெற்ற "இடைத்தேர்தல் ஒன்றில் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சி மற்றுமோர் தோல்வியை கண்டுள்ளது. ஈஸ்ட்போன் பகுதி இடைத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் பெரும்பான்மை வாக்குகளை பெற்றுள்ளார். ஈஸ்ட்போன் உறுப்பினர் கடந்த ஜுலையில் ஐ. ஆர். ஏ தீவிரவாதிகளின் குண்டுக்கு பலியானதை தொடர்ந்தே இந்தத் தேர்தல் நடைபெற்றது. (து

# ஜனசக்தி பெறுவோர்களுக்கு முகாம்களில் எடுபிடி வேலை

அக்கரைப்பற்று, திருக்கோவில், பொத்துவில் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த ஜனசக்தித் திட்ட நிவாரணம் பெறுபவர்களை அங்குள்ள படையினர் முகாம்களில் எடுபிடி வேலைகளுக்கு பாவிக்கின்றனர்.

இவ்வாறு வேலை செய்பவர்கள் தண்ணீர் கேட்டால் ஒருவரின் சிறுநீரை மற்றவர் பருகுமாறும், பசிக்கு மண்ணை அள்ளி ''ஈழ மண் சாப்பிடு'' என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் தினசரி இங்குள்ள மினி முகாம்களுக்குச் சென்று கையொப்பமிட்டு படையினர் கூறும் வேலைகளைச் செய்ய வேண்டும் எனவும் பணிக்கப் படுகிறார்கள். (66-ரு)

# பருத்தித்துறை- மருதங்கேணி வீதி திருத்த வேலைகள் ஆரம்பம்

பருத்தித்துறை- மருதங்கேணி வீதி திருத்தி அமைக்கும் வேலைகள் கடந்த செவ்வாய் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

ஆரம்ப நடவடிக்கையாக வடமராட்சி கிழக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அண்மையிலிருந்து ஒரு மைல் தூரத்திற்கு வீதியின் இருமருங்குகளும் ஊரிமண் போட்டு சமப்படுத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (18ரு)

# வாகனங்களைச் சுவீகரிக்க படையினருக்குத் தடை

இராணுவத்தினரோ பொலிசாரோ கண்டபடி பொதுமக்களின் வாகனங்களை சுவீகரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு தடைவிதித்துள்ளது.

வாகனங்கள் அவசரம் தேவைப்படின் இராணுவத்தினர் படைத்தளபதியினதும், பொலிஸார் பொலிஸ் மா அதிபரினதும் அனுமதியைப் பெற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தெற்கில் படையினர் பொதுமக்களின் வாகனங்களை கண்டபடி சுவீகரிப்பதாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம். (கி)

### ஊரடங்கு...

பொருட்கள் தொடர்ந்து பத்து வாரங்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டாலும், கப்பல்கள் மூலம் இனி வந்து சேரவிருக்கும் பொருட்களைக் கொண்டே இடம் பெயர்ந்தோருக்கான 4 வது கட்டமும் ஏனையோருக்கான 3 வது கட்ட உணவு விநியோகமும் அதற்கடுத்து வரும் விநியோகங்களையும் நடைமுறைப்படுத்தக் கூடியதாகவிருக்கும் என செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன, (66ரு)

## சினைப்பர் தாக்குதல்

நேற்று ஆனையிறவு இராணுவ முகாம் மீது நடாத்திய சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் பலியானார்.

# வயாவிளான் திக்கப்பிராயில் இராணுவம் வீடுகளை எரித்தது

பலாலியிலிருந்து வயாவிளான் வந்த இராணுவத்தினர் வழியில் சில வீடுகளை எரித்ததாக அவர்களிடம் அகப்பட்டு தப்பிவந்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

வயாவிளான் திக்கப்பிராய் என்ற இடத்தில் நேற்று முன்தினம் வியாழன் வீட்டில் இருந்தபோது காலை 9 மணியளவில் இராணுவத்தினர் துப்பாக்கிகளை நீட்டியபடி தம்மிடம் வந்ததாக அங்கிருந்து தப்பி வந்த இ. சுப்பிரமணியம் (50) அவரது தாயாரான ஆச்சிமுத்து ஆகியோர் தெரிவித்தனர்.

விபத்தினால் காலை இழந்த இவரும், நோய்வாய்ப்பட்டிருந்த தாயாரும் எங்கும் செல்ல முடியாது வீட்டில் இருந்ததால் இராணுவத்தினரிடம் அகப்படவேண்டியிருந்ததாகவும் கூறினார்கள்.

எனக்கு ஒரு கால் இல்லாதது கண்ட இராணுவத்தினர் 'நீயும் ஒரு புலி அதனால் தான் கால் இல்லை' என்று கூறியதுடன் அவர்களுக்கு சமைக்கவா இருக்கிறாய் என்று என்னைத் தாக்க வந்தனர்,

நான் எனது வறுமை நிலைமையை அவர்களுக்குக் கூறினேன் வீட்டைச் சோதனையிட்டனர். அந்த நேரம் அதிகாரி ஒருவர் வந்து சிங்களத்தில் ஏதோ கூறியதும் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை.

தாம் செல்லும்வரை இந்த இடத்தைவிட்டு அசையக் கூடாது என்று எச்சரித்தனர்.

எனது வீட்டுக்கு அருகில் உள்ள தி. பரமேஸ்வரி வீட்டில் இருந்த முருகன், சரஸ்வதி படங்களை வெளியே எடுத்துவந்த பின்னர் அந்த வீட்டைக் கொளுத்தினர். அதேபோல மற்றொரு வீட்டையும் எரித்தனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர், (ப 24 ரு)

## இரத்ததானம்

மானிப்பாய் போதனா வைத்தியசாலையில் உரும்பிராய், ஊரெழு பகுதியைச் சேர்ந்த இளைஞர்களும், யுவதிகளும் இரத்ததானம் செய்தனர். சுமார் 25க்கும் மேற்பட்ட இளைஞர்களும், யுவதிகளும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது இதற்காகசமுகமளித்தனர்.(ப14ரு)

## இன்று சம்பளம்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகள், குடும்பநலசேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், ஊழியர்களுக்கான செப்டம்பர் மாத வேதனம் மானிப்பாய் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவில் இன்று காலை 9 மணியிலிருந்து 11 மணிவரை வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ப11ரு)

## இவரைக் காணவில்லை

வயாவிளான் வட மூலையில் வசிக்கும் முத்துத்தம்பி மரியராசா (39) என்பவர் நேற்று முன்தினம் இராணுவம் இப்பகுதியூடாக வந்த போது காணாமற் போய்விட்டதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர். (ப 24 ரு)

### சுன்னாகத்தில்...

கம் (35), கோ. நகுலேஸ்வரன் (39), திருமதி நகுலேஸ்வரன் (39) ஆகியோர் காயமடைந்து மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நகுலேஸ்வரனின் வீடு பலத்த சேதமடைந்தது. முத்துக்கிருஷ்ணன் ஒழுங்கையில் விழுந்து வெடித்த குண்டினால் பல வீடுகள் சேதமடைந்தன.

மல்லாகத்தில் மாலை 4-45க்கு பழம் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள வைத்திலிங்கம் என்பவரின் வீட்டின் மீது பொம்மர் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இதனால் அருகில் உள்ள அச்சகம், பொன்னையா, நடராசா, அம்பிகைபாகன் ஆகியோரின் வீடுகளும், சுகாதார நிலையமும் சேதமாகின.

மல்லாகத்தில் காலையில் 7ஆம் கட்டை ஒழுங்கையில் ஹெலிகொப்டரில் இருந்து நடாத்தப்பட்ட றொக்கட் தாக்குதலால் இரு வீடுகள் சேதமடைந்ததுடன் இருவர் காயமடைந்தனர்.

(ப-14-10.48-ரு)

# 6 நாள் வேலைத்திட்டத்தை அரசு கைவிட்டுள்ளது

வாரத்தில் ஆறு நாட்களை வேலை நாளாக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டுள்ளது. இதன்படி சனி, ஞாயிறு தினங்கள் தொடர்ந்தும் அரச விடுமுறைதினங்களாகவேயிருக்கும்.

எரிபொருள் பற்றாக்குறை நிலையை அனுசரித்து 6 நாள் வேலைத்திட்டத்தை கைவிடவும், அதேவேளை 5 நாள் வேலையின் போது கடமை நேரத்தை முழுமையாகப் பயன்படுத்த ஊழியர்களை வலியுறுத்தவும் அரச மட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

1978-ம் ஆண்டில் 6 நாள் வேலைத்திட்டம் இங்கு அமுலில் இருந்ததும் குறிப்பிடத்தக்கது. (கி)

### வட. கிழக்கு கூட்டுறவுச் சங்கத்தில்

# வெற்றுத் தீப்பெட்டிகள் நிறையிலும் மோசடி

வடமராட்சி கிழக்குப் பல. நோ. கூ. சங்கத்தின் சில கிளைகளில் விற்கப்படும் தீப்பெட்டிகளில் வெற்றுத் தீப்பெட்டிகளும விநியோகிக்கப்படுகின்றன. இந்த மோசடி தீப்பெட்டி கம்பனியின் வேலையா அல்லது கூட்டுறவு சங்கக்கிளை முகாமையாளரின் வேலையா என்று பொது மக்கள் கேட்கின்றனர். அத்துடன் சில கிளைகளில் நிறைகளிலும் மோசடி இடம் பெற்று சிற்றூரவைகளினால் கண்டுபிடிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. 43 ரு

# உடுத்துறையில் குண்டு வீச்சு குரங்குகள் தலை சிதறிப் பலி

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் கடந்த திங்கட்கிழமை மாலை குண்டுவீச்சு விமானங்கள் நடாத்திய குண்டுத் தாக்குதலில் இரண்டு வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

இராசையா, இராசகாந்தன் என்போரின் வீடுகள் சேதமடைந்தன,

ஆனாலும் இக்குண்டு வீச்சில் அகப்பட்டு 5 குரங்குகள் தலை சிதறி மரணமாகின.

ஒரு குரங்குக் குட்டி தனது தாய் இறந்ததை அறியாது இறந்த தாயின் மடியில் இருந்து பால் குடித்துக் கொண்டிருந்த பரிதாபக் காட்சி எல்லோரையும் மனம் உருக வைத்தது. (43ரு)

### பலாலியில்...

தொகை இதைவிட அதிகமாக இருக்கலாம் என சுயாதீனச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

### பலதடவை...

யன் கல்லூரியும், அங்குள்ள தேவாலயமும் பலத்த சேதமடைந்தன. இக்கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீடொன்றும் பலத்த சேதமடைந்தது இதில் இரு வாகனங்களும் சேதமாகின.

இதேபோல அவ்ரோ விமானங்களும், ஹெலிகப்டர்களும் நேற்று முழுவதும் தாக்குதல்களை நடாத்தின.

ப-11-14,10-48ரு

### யாழ்...

ளிகள் தத்தம் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெறுமாறும் யாழ் போதனா வைத்தியசாலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மழைகாலம் தொடங்கியுள்ளதால் இது தொடர்பான பல நோய்கள் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை மீண்டும் இயங்கச்செய்யாவிடில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் அவர் சொன்னார். (ப11-ரு)

### மன்னார்...

எடுக்கப்பட்டுள்ளது. மன்னார் சென். சேவியர் கல்லூரி, கன்னியர் மடம் ஆகிய பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன,

வெளிமாவட்ட ஆசிரியர்கள் சைக்கிள்கள் மூலம் வந்தாலும், ஆசிரியைகளின் வரவு குறைவாக உள்ளது. விரைவில் சகல பாடசாலைகளும் நடைபெறும் என் நம்பப்படுகின்றது. (17-கி)

### வதந்தியால்...

வேலி வடக்கு, நாவற்காடுப் பகுதி மக்களும் இடம்பெயர்ந்தனர்.

பொய்யான வதந்தியென இளைஞர்களால் கூறப்பட்டதையடுத்து மக்கள் சில மணி நேரத்தில் சொந்த இடங்களுக்குத் திரும்பினர். (32, ப24)

### மட்டு...

குடிக்கும் கல்லடிக்கும் இடையில் ரோந்து சென்ற ராணுவத்தினரின் ஜீப் மீது புலிகள் தாக்குதலை நடாத்தினர் எனினும் ராணுவத்தினருக்கு ஏற்படடசேத விபரங்கள் தெரியவில்லை. (து)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, லக்ஷ்மிபில்டிங்"இல் உள்ள அச்சகத்தில் 20-10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.